நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

First Published : 23 Mar 2010 06:26:30 AM IST

உதகை, மார்ச் 22: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் நடைபெற்றது.

உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம், உதகை காட்டேரி நீர்ப்பிடிப்பு பகுதி விவசாயிகள் சங்கம், கேத்தி பாலடா மற்றும் கூக்கல் பொதுமக்கள், இந்தியன் லிபரல் குரூப் உள்ளிட்ட அமைப்புகளை சேர்ந்தவர்களும், விவசாயிகளும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, பெற்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தேயிலை பறிக்கும் இயந்திரம், கைத்தெளிப்பான், பவர் டில்லர் முதலான கருவிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 25 சத மானியத்துடனும், பசுமைக் குடில்களை அமைத்தல், மண்புழு உரம் தயாரித்தல், தேனீ வளர்த்தல், சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் ஆகியவை தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும், தெளிப்பு நீர் பாசன திட்டத்தில் 65 சத மானியத்துடனும் தற்போது வழங்கப்பட்டு வருவதாக தோட்டக்கலை இணை இயக்குநர் இஸ்ரவேல் தெரிவித்தார்.

அதேபோல, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரது அறிக்கையின் பேரில் கூக்கல் கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக்கடை திறக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென மாவட்ட வழங்கல் அலுவலரால் உறுதியளிக்கப்பட்டது. நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட பதிலில் 3 புதிய உருளைக்கிழங்கு தரம் பிரிக்கும் இயந்திரங்களை கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், இம்மாத இறுதிக்குள் புதிய இயந்திரங்கள் செயல்படத் தொடங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை சீற்றத்திற்கான நட்ட ஈடு மானியம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.7,500 என அரசால் நிர்ணயிக்கப்பட்டு கடந்த நவம்பர் மாதத்தில் மாவட்டத்தில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு நிவாரணத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. உதகை ஊராட்சி ஒன்றய ஆணையர் அளித்தி6ருந்த பதிலில் கீழ்கவ்வட்டி கிராமத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.2 லட்சம் செலவில் பொதுக் கழிப்பிடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**சொட்டுநீர் பாசனத்துக்கு கடன் கூட்டுறவு வங்கிகளில் இன்று விவசாயிகள் சந்திப்புக் கூட்டம்**

First Published : 23 Mar 2010 04:10:38 AM IST

திருவாரூர், மார்ச் 22: சொட்டு நீர் பாசனம் அமைக்க கூட்டுறவு வங்கிகளில் மானியத்துடன் கூடிய கடன் பெற விவசாயிகள் சந்திப்புக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (மார்ச் 23)நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் டி. அமலதாஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேளாண் பொறியியல் துறையின் மானிய உதவியோடு கடன் பெறலாம். இதற்கென விவசாயிகள் சந்திப்புக் கூட்டம் 4 கூட்டுறவு சங்கங்களில் நடைபெறவுள்ளது.

கூத்தனூர் (பூந்தோட்டம்) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும், திருமீயச்சூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பகல் 12 மணிக்கும், நெடுங்குளம் தொடக்க

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பிற்பகல் 3 மணிக்கும், பில்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பிற்பகல் 5 மணிக்கும் விவசாயிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டங்களில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், உரிய ஆவணங்களுடன் கடன் விண்ணப்பங்களை அளித்து, கடன் பெறுவதற்கான ஆலோசனைகளைப் பெற்று பயனடையலாம் என அமலதாஸ் தெரிவித்துள்ளார்.

**திருவாரூரில் மார்ச் 25-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்**

First Published : 23 Mar 2010 04:09:38 AM IST

திருவாரூர், மார்ச் 22: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (மார்ச் 25) முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகிப்பார்.

இந்தக் கூட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்கவுள்ளனர். எனவே, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகள், கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம் என வேளாண் இணை இயக்குநர் சொ. அன்பழகன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வேடந்தாங்கலில் 40 ஆயிரம் பறவைகள்**

First Published : 23 Mar 2010 12:48:00 AM IST



வேடந்தாங்கல் சரணாலயத்தில் காணப்படும் பறவைகள்.

மதுராந்தகம், மார்ச் 22: கோடை தொடங்கிய நிலையிலும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் உள்ளன.

இந்நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

மதுராந்தகம் அருகே 15 கி.மீ. தொலைவில் உள்ளது வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம். இயற்கை சூழலோடு மரங்களைக் கொண்ட ஏரியின் கரையில் அமைந்துள்ளது இச் சரணாலயம்.பருவகால சூழல், இனப்பெருக்கம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக பல்லாயிரம் கிலோ மீட்டர்களை கடந்து இங்கு பறவைகள் வந்து செல்கின்றன.

இங்கு ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதியில் பருவமழைக்குப் பின்னர் பறவைகள் வரத் தொடங்கும். இப் பறவைகள் ஏரியில் உள்ள மரங்களில் கூடு கட்டி, குஞ்சு பொரித்து, குஞ்சுகள் வளர்ந்தவுடன் அவற்றுடன் தங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்லும்.

பறவைகளின் வருகைக்கு ஏற்றாற்போல் சரணாலயம் பொதுமக்களுக்கு திறக்கப்படுகிறது. பறவைகள் தங்கிருக்கும் காலம் வரை சரணாலயம் திறந்திருக்கும்.

இந்த ஆண்டு நவம்பர் மாத 2-வது வாரத்தில் சரணாலயம் திறக்கப்பட்ட பொழுது 10 ஆயிரம் பறவைகள் வந்திருந்தன. தற்போது சரணாலயத்தில் நத்தி குத்தி நாரை, வர்ணநாரை, மிளிர் உடல் அரிவாள் மூக்கன், வெள்ளை அரிவாள் மூக்கன், சாம்பல் நிற நாரை, பாம்பத்தாரா, கரண்டிவாயன், தட்டவாயன், சிரவி, வக்கா, ஊசிவால் வாத்து உள்ளிôட்ட 26 வகை அரிய பறவையினங்கள் எண்ணிக்கையில் சுமார் 40 ஆயிரம் உள்ளன.

இந்த பறவையினங்கள் பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆஸ்திரேலியா, கனடா போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

இந்த ஆண்டு சரணாலயத்தில் தாமதமாக சீசன் தொடங்கியதால் 5 மாதங்களாக பறவைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இது மேலும் 1 மாதம் அல்லது 2 மாதங்கள் நீடிக்கலாம் என வனத் துறையினர் தெரிவித்தனர்.தற்போது சரணாலயத்தில் தொடர்ந்து பறவைகள் தங்கிருப்பதற்கு காரணம் சுற்றியுள்ள பகுதிகளில் கிடைக்கும் போதுமான உணவு, ஏரியில் தொடர்ந்து குறையாத நீரளவு, குஞ்சுகளை அவை வளர்ப்பது ஆகியவையே என வனத்துறையினர் கூறுகின்றனர்.

இந்நிலையில் இச் சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகிறது. பறவைகள் தங்கள் குஞ்சுகளுடன் ஆராவாரமான இசையை எழுப்புவது மனச் சோர்வுடன் வருவோருக்கு புத்துணர்ச்சி அளிப்பதாக உள்ளது.

**கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 23 Mar 2010 12:00:00 AM IST

புதுச்சேரி, மார்ச் 22: புதுச்சேரியில் கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும் என்று திமுக அமைப்பாளர் ஆர்.வி.ஜானகிராமன் வலியுறுத்தியுள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில், வரும் கரும்பு அரவைப் பருவத்துக்கு டன் ஒன்றுக்கு ஊக்கத்தொகை, வண்டி வாடகை உள்பட ரூ.2 ஆயிரம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

÷புதுச்சேரி கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், நடைபெறவிருக்கும் சட்டமன்ற கூட்டத்தொடரில் முதல்வர் வி.வைத்திலிங்கம் கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரம் என அறிவிக்க வேண்டும். தமிழகத்தை போல புதுச்சேரியிலும் கூட்டுறவு வங்கிகளில் வட்டியில்லா கடன் திட்டத்தை முதல்வர் அறிவிக்க வேண்டும். ஊனமுற்றோரை தமிழகத்தைபோல மாற்று திறனாளிகள் என அழைக்க வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 72.67 அடி**

First Published : 23 Mar 2010 06:23:40 AM IST

சேலம், மார்ச் 22: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 72.67 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,158 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அணையின் நீர் இருப்பு 35.37 டி.எம்.சி.

தினமலர்

**விதை விதைத்த நாமே அறுவடை செய்ய வாய்ப்பு: பரிதி இளம்வழுதி பேச்சு**

கோயம்பேடு : "இந்த ஆண்டு இறுதிக்குள் சரக்கு லாரிகள் நிறுத்துமிடத்திற்கான திட்டம் முடிந்து விடும் என்பதால், விதை விதைத்த நாமே அறுவடை செய்ய வாய்ப்புள்ளது," என, செய்தித் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி பேசினார். கோயம்பேடு மார்க்கெட்டில் இட நெரிசல் மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் விதம், மார்க்கெட்டின் பின்புறம் சரக்கு லாரிகள் மற்றும் பார ஊர்திகள் நிறுத்துமிடம் மற்றும் மலர் அங்காடிக்கு அருகே பூங்கா அமைக்கும் பணி ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் செய்தித் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி அடிக்கல் நாட்டு விழாவை துவக்கி வைத்தார். பின் இத்திட்டத்திற்கு வரைபடம் வடிவமைப்பு உருவாக்கி கொடுத்த அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, கோயம்பேடு பஸ் நிலைய வளாகத்தை சுத்தம் செய்ய, இரண்டு தரை துப்புரவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சியில் செய்தித் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி பேசியதாவது: தற்போது கிராமத்தில் வசிப்பவர்கள் பல்வேறு காரணங்களுக்காக நகரத்தை நோக்கி வருகின்றனர். நகர்மயமாதல் என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதை கருத்தில் கொண்டு தான், தொலை நோக்கு பார்வையாக புதிய துணை நகரம் வேண்டும் என, தி.மு.க., ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்ட போது வலியுறுத்தப்பட்டது. மேலும் ஏழு ஏக்கர் பரப்பளவில், ஏழு கோடி ரூபாய் திட்டத்தில் இங்கு சரக்கு லாரிகள் நிறுத்துமிடத்திற்கான திட்டம் சிறப்பாக நிறைவேறவுள்ளது. நிறைய திட்டங்களை நாம் விதைத்து பயிர் செய்வோம். வேறொரு கட்சியைச் சார்ந்தவர்கள் அறுவடை செய்து விடுவார்கள். இந்த சரக்கு லாரிகள் நிறுத்துமிடத்திற்கான திட்டம், முழு அளவில் விரைவுப்படுத்தப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் முடியும். இந்த திட்டத்தை பொறுத்தவரை விதை விதைத்த நாமே அறுவடை செய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு பரிதி இளம்வழுதி பேசினார்.

நிகழ்ச்சியில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் விக்ரம் கபூர், துணைத் தலைவர் சூசன் மேத்யூ, முதன்மைச் செயல் அலுவலர் கண்ணுசாமி, வடசென்னை எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**குப்பையிலிருந்து உரம், செங்கல் தயாரிக்கும் திட்டம் : வேளச்சேரியில் இன்று மக்கள் கருத்து கேட்பு முகாம்**

சென்னை : பெருங்குடி குப்பை வளாகத்தில், அறிவியல் ரீதியாக குப்பையிலிருந்து உரம் மற்றும் கட்டுமான செங்கல் தயாரிக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து பொதுமக்கள் கருத்தறியும் கூட்டம், வேளச்சேரியில் இன்று நடக்கிறது.

சென்னை மாநகராட்சியின் பத்து மண்டலங்களிலும் தினம்தோறும் 3,600 டன்னுக்கும் மேலாக குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. வடசென்னையில் சேகரிக்கப்படும் குப்பைகள், கொடுங்கையூர் குப்பை வளாகத்திலும், தென்சென்னையில் சேகரிக்கப்படும் குப்பைகள், பெருங்குடி குப்பை வளாகத்திலும் கொட்டப்படுகின்றன. பெருங்குடி குப்பை வளாகத்தில் தினமும் 1,600 டன் குப்பைகள் கொட்டப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுவருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனால், குப்பையிலிருந்து உரம் மற்றும் கட்டுமானத்திற்கு தேவையான செங்கற்கள் தயாரிக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தமும் கோரப்பட்டுள்ளது. பெருங்குடி குப்பை வளாகத்தில், குப்பையால் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் மாநகராட்சி எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கவும், பொதுமக்கள்

கருத்தறியும் வகையிலும் வேளச்சேரியில் இன்று (மார்ச் 23) மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுகிறது.
இதுகுறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாசு கட்டுப்பாட்டு வாரிய அறிவுரைப்படி, குப்பைகளை பிரித்தெடுத்து அறிவியல் ரீதியாக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மக்கும் குப்பைகளில், ரசாயன பொருட்கள் சேர்த்து விவசாயத்திற்கும் பயன்படும் வகையில் உரம் தயாரிக்கப்படும். மறு சுழற்ச்சிக்கு ஏற்ற பிளாஸ்டிக் கழிவுகள் மீண்டும் பயன்படுத்தப்படும்.
மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக்குகள், சிமென்ட் தொழிற்சாலைகளில் எரிபொருளாக பயன்படுத்தப்படும். குப்பையில் உள்ள எரியும் தன்மையுள்ள பொருட்களைக் கொண்டு எரிகட்டிகள் தயாரிக்கப்படும். குப்பையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் கற்கூளங்களைக் கொண்டு கட்டுமான செங்கல் தயாரிக்கப்படும்.
இத்திட்டம் நடைமுறைப்படுத்தும் இடத்தைச் சுற்றிலும் பசுமையான புல்வெளிகள் அமைத்தும், மரக்கன்றுகள் நட்டும் பசுமைப் பகுதியாக மாற்றப்படும். இதனால், சுற்றுச்சூழல் மேம்படுவதோடு, காற்று மண்டலத்தில் பிராண வாயு அதிகமாக வாய்ப்புள்ளது. பெருங்குடி குப்பை வளாகத்தில் குப்பைகள் தேங்காமல், சுகாதாரமான முறையில் உடனுக்குடன் அகற்றி, அறிவியல் ரீதியாக குப்பை பதனிடும் முறையை செயல்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் மேம்பாடடையச் செய்ய முடியும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவக் கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கம்**

சென்னை : சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 'இளங்கலை கால்நடை மருத்துவப் படிப்பிற்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டம் மற்றும் கல்வி முறைகளின் விரிவாக்கம்' என்ற தலைப்பிலான சர்வதேச இரண்டு நாள் கருத்தரங்கம் நேற்று துவங்கியது.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்; வங்கதேச சட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்; லண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் லிவர்பூல் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து இந்த கருத்தரங்கை நடத்துகின்றன. இதில், தெற்கு ஆசிய நாடுகளில், வரும் 2025ம் ஆண்டில் கால்நடை மருத்துவப் படிப்பிற்கான தேவைகள், திட்டங்கள், மேம்பாட்டு நடைமுறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் பிரபாகரன் வரவேற்றார். ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் பிரைன் அல்டிரிச் விவரித்தார். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ஞானப்பிரகாசம் சிறப்புரை ஆற்றினார்.
தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத்துறை செயலர் முத்துகுமாரசுவாமி சர்வதேச கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகையில்,'கால்நடை மருத்துவ துறையின் வளர்ச்சியை மனதில் கொண்டு இந்த சர்வதேச அளவிலான கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. இதில், தெற்கு ஆசிய நாடுகளில் வளர்ந்து வரும் கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடைப் பண்ணைத் தொழில்களின் தேவைக்கேற்ப கால்நடை பாடத்திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது,' என்றார்.
பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தங்கராஜூ பேசுகையில், 'அசோகர் கால கட்டத்திலேயே கால் நடை மருத்துவம் துவக்கப்பட்டுள்ளது. அப்போது, யானைகள் மற்றும் குதிரைகளுக்கு ஏற்படும் நோய்கள் கண்டறிந்து, குணப்படுத்தப் பட்டுள்ளது. இணையதள உதவியுடன் விலங்கு களுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து, மருத்துவம் பார்ப்பதற்காக கால்நடை மருத்துவமனைகளை நாடுகின்றனர். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம் ஆகியவையும் கால்நடை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது' என்றார்.
பல்கலைக் கழக அடிப்படை அறிவியல் புல முதல்வர் சீனிவாசன் நன்றி கூறினார். கருத்தரங்கில் கால்நடைப் பல்கலைக் கழக பேராசிரியர்கள், ஓய்வு பெற்ற கல்வித்துறை வல்லுனர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**கொப்பரை கொள்முதல் தொடருமா? குழப்பத்தில் விவசாயிகள்: தேங்காய் நேரடி கொள்முதல் நடக்குமா ?**

பொள்ளாச்சி: கொப்பரை கொள்முதலை தொடர்வது பற்றியும், தேங்காய் நேரடி கொள்முதல் துவங்குவது பற்றியும் 'நேபட்' அதிகாரிகள் தெளிவான அறிவிப்பை வெளியிடாததால் விவசாயிகள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். தேங்காய் விலை சரிவை தடுக்க மத்திய அரசு ஆதரவு விலை அறிவித்து கொப்பரை கொள்முதல் செய்கிறது. மத்திய அரசின் 'நேபட்' நிறுவனமும், மாநில அரசின் 'டான்பேட்' நிறுவனமும் இணைந்து கொப்பரை கொள்முதல் செய்கிறது.

தமிழகத்தில் பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், தாராபுரம், பட்டுக்கோட்டை ஆகிய ஐந்து மையங்களில் கொப்பரை கொள்முதலை கடந்தாண்டு ஏப்ரல் மாதம் துவங்கியது. ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய்க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தென்னை விவசாயிகள் பெரும்பாலும் கொப்பரை உற்பத்தி செய்யவதில்லை. தேங்காய் வியாபாரிகள் தென்னந்தோப்புகளில் தேங்காய்க்கு விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய் கின்றனர். அவற்றை வியாபாரிகளே கொப்பரையாக்கி விற்பனை செய்கின்றனர். தென்னை விவசாயிகளுக்காக அரசு அறிவித்த ஆதரவு விலை திட்டத்தை வியாபாரிகள் பயன்படுத்தி வருகின்றனர். விவசாயிகள் பெயரில் கொப்பரை கொள்முதல் அடையாள அட்டை உள்ளதால், விவசாயிகளின் பெயரில் கொப்பரை விற்பனை செய்வதற்கு கிலோவுக்கு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக வியாபாரிகள் கொடுத்து வருகின்றனர்.

வசதி படைத்த அரசியல் பிரமுகர்கள் கொப்பரை உற்பத்தியாளர்களிடம் கொப்பரையை வெளிமார்க்கெட் விலைக்கு வாங்கி, விவசாயிகள் பெயரில் விற்பனை செய்து லாபம் அடைகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யாத கொப்பரைக்கு கொள்முதல் விலை அறிவித்ததால் வியாபாரிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து கொள்ளை அடிக்கின்றனர். விவசாயிகள் நேரடியாக உற்பத்தி செய்யும் தேங்காயை கொள்முதல் செய்ய வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வரு கின்றனர். பார்லிமெண்ட்டில் அ.தி.மு.க., எம்.பி., சுகுமார், ம.தி.மு.க., எம்.பி., கணேசமூர்த்தி ஆகியோர் இந்த பிரச்னையை பேசியதால், தமிழகத்தில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக தேங்காயை கொள்முதல் செய்யும் அறிவிப்பை 'நேபட்' நிறுவனம் அறிவித்தது. விவசாயிகளிடம் இருந்து தேங்காய் டன்னுக்கு 12,500 விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய தமிழக 'நேபட்' அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. தேங்காய் நேரடி கொள்முதல் திட்டம் அறிவிக்கப்பட்டு 15 நாட்களுக்கு மேலாகியும் இதுவரை, அதற்கான அடிப்படை பணிகள் எதுவும் செய்யப்படவில்லை.

கொப்பரை கொள்முதல் செய்யும் மையங்களிலேயே தேங்காய் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், கொப்பரை கொள்முதல் மைய அதிகாரிகளுக்கு தேங்காய் கொள்முதல் தொடர்பாக எவ்வித உத்தரவும் ஆவணமாக வரவில்லை என்று கூறுகின்றனர். தென்னை விவசாயிகள் கூறியதாவது: 'கடந்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை சரியாமல் உள்ளது. வரும் ஏப்ரல் முதல் தொடர்ந்து கொப்பரை கொள் முதல் செய்ய எவ்வித அரசு உத்தரவும் வெளியிடப்படவில்லை. தென்னை விவசாயத்திற்கான உரம், மருந்துகள் விலையும், ஆட்கள் கூலியும் உயர்ந்துள்ள நிலையில் கொப்பரை கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்பும் எதுவும் வெளியிடப்படவில்லை. தமிழகத்தில் உடனடியாக தேங்காய் நேரடி கொள்முதலை துவங்க வெளியிடப்பட்டு உத்தரவும் அமல்படுத்தப்படவில்லை. தேங்காயை கொள்முதல் செய்து கொப்பரை தயாரிக்கும் போது வேலைவாய்ப்பு அதிகரிக்கும். வரும் ஆண்டுக்கு கொப்பரை கொள்முதல் விலை உயரவில்லை, கொப்பரை தொடர்ந்து கொள்முதல் செய்யப்படுமா என்ற அறிவிப்பும் வரவில்லை, தேங்காய் கொள்முதலும் துவங்கவில்லை. இதனால் விவசாயிகள் மத்தியில் குழப்பம் தான் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தென்னை விவசாயிகள் தெரிவித்தனர்.

**வேளாண் பேராசிரியருக்கு களை அறிவியலார் விருது**

கோவை: தமிழ்நாடு வேளாண் பல்கலை பேராசிரியர் சின்னசாமி, இந்திய 'களை அறிவியல்' அமைப்பின் 2009-2010ம் ஆண்டிற்கான 'களை அறிவியலார்' விருதை பெற்றுள்ளார். களை அறிவியலில் பல்வேறு பயிர்களில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை, பிரச்னைக்குரிய மற்றும் நச்சுத்தன்மை உடைய களைகளின் கட்டுப்பாடு ஆகியவைகளில் ஆராய்ச்சிக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியின் முடிவுகள், மாநில அளவிலான பயிர் சாகுபடி தொழில்நுட்ப கையேட்டில் உழவர்களின் பயன்பாட்டிற்காக இடம் பெற்றுள்ளன. இவர் தற்போது, அகில இந்திய ஒருங்கிணைந்த திட்ட ஆய்வின் களை கட்டுப்பாட்டு பிரிவின் முதன்மை ஆராய்ச்சியாளராக உள்ளார். களை கட்டுப்பாட்டில் அரசு துறைகள் மற்றும் தனியார் துறை நிதியுதவி பெற்று, 24 ஆராய்ச்சி திட்டங்களை நடத்தியுள்ளார். மூன்று புத்தகங்கள், பல தேசிய மற்றும் உலக அளவிலான ஆராய்ச்சி கட்டுரைகளை களை அறிவியலில் எழுதி உள்ளார். செய்முறை வேளாண்மையில் சிறந்து விளங்கியதற்காக, திவான் பகதூர் ரகுநாத ராவ் பரிசு மற்றும் ஆன்ஸ்டெட் பரிசை பெற்றுள்ளார்.

**கொடைக்கானலில் ஒருங்கிணைந்த பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டம்**

திண்டுக்கல் : கொடைக்கானல் கவுஞ்சியில் 200 ஏக்கரில் ஒருங்கிணைந்து சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகள் வங்கிக் கடன் கிடைக்காமலும்,தண்ணீர் வசதியில்லாமலும் அவதிப்படுகின்றனர்.இந்த பிரச்னையை தீர்த்து 1000 ஏக்கரில் சாகுபடியை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

கொடைக்கானல் கவுஞ்சியில் கடந்த 2008ம் ஆண்டு 200 ஏக்கரில் பயிர் சாகுபடி திட்டம் அமல்படுத்தப்பட்டது. வீரிய ரக காய்கறிகள், பூக்கள், கொய் மலர்கள் உற்பத்தி செய்வதற்கும், விவசாயிகள் கூட்டு பண்ணை முறையில் விவசாயம் செய்வதற்கும் முடிவு செய்யப் பட்டு பணிகள் துவக்கப் பட்டன. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டதால், இங்கு விளைந்த பொருட்களை மார்க்கெட்டிங் செய்வதில் சிக்கல் ஏற்பட்ட தோடு, தண்ணீர் பிரச்னையும் ஏற்பட்டது.

தற்போது தோட்டக்கலைத்துறையினர் சொட்டுநீர் பாசன முறையை கையாள விவசாயிகளை வலியுறுத்துகின்றனர். மேலும் கூட்டுப் பண்ணை அமைந்துள்ள இடத்தின் அருகில் பெரிய நீர் ஊற்று செல்வதால் இதை தடுத்து அணைக் கட்டினால் விவசாயத்திற்கு பிரச்னை இல்லாமல் இருக்கும் என விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்நிலையில் பயிர்,மலர் சாகுபடியை ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள் ளது.

கலெக்டர் வள்ளலார் கூறியதாவது: கொடைக்கானல் கவுஞ் சியில் கூட்டு பண்ணை முறையில் 200 ஏக்கர் பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.இதனை 1000 ஏக்கராக விரிவுபடுத்த முயற்சி நடந்து வருகிறது. மேலும் விவசாயத்திற்கு தேவையான தண்ணீரை பெற அணை கட்ட வும் முயற்சி மேற் கொள்ளப்படும். இதற்கு வனத்துறையிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. இவ் வாறு அவர் கூறினார்.

**நெல் கொள்முதல் விவரங்களை அரசுக்கு தெரிவிக்க அறிவுரை**

திண்டுக்கல் : தனியார்கள் நெல், அரிசி கொள்முதல் செய்த விவரங்களை மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமை அரசுக்கு அறிக்கையாக வழங்க வேண்டும் என கலெக்டர் வள்ளலார் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: திண்டுக்கல் மாவட்டத்தில் நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்யும் கம்பெனிகள், நிறுவனங்கள், தனியார்கள் கடந்த 2009ம் ஆண்டு அக்., முதல் 2010ம் ஆண்டு செப்., வரை மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமை அன்று கொள்முதல் விவரங்களை அரசுக்கு அறிக்கையாக தர வேண்டும். 10 டன்னுக்கு மேல் நெல், அரிசி கொள்முதல் செய்திருந்தால் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

25 டன்னுக்கு அதிகம் கொள்முதல் செய்திருந்தால், புதுடில்லி கிருஷிபவன், உணவு, பொதுவிநியோக திட்ட அரசு சார்பு

செயலாளருக்கு அறிக்கை வழங்க வேண்டும். இந்த உத்தரவை மீறி நெல், அரிசி கொள்முதல் செய்யும் நபர்கள் மீது அத்தியாவசிய பொருட்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கண்வலிக்கிழங்கு கொள்முதல் மையம் : ஒட்டன்சத்திரம் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் மருத்துவக் குணம் நிறை ந்த 'கண்வலிக்கிழங்கு' கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஒட்டன்சத்திரத்தில் உள்ள அம்பிளிக்கை, கள்ளிமந்தையம், சுற்றியுள்ள கிராமப்பகுதிகள் மற்றும் அருகிலுள்ள வெள்ளக் கோவில், மூலனூரைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் கண்வலிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படுகிறது. பல மருத்துவ குணங்கள் செறிந்த இக்கிழங்கை இடைத்தரகர்கள், விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு கொள் முதல் செய்கின்றனர். இவ்வாறு வாங்கப்படுபவை ஏஜன்ட்கள் மூலம் வெளிநாடுகளுக்கு அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
மார்க்கெட் நிலவரம் குறித்து சரிவர தெரிய வாய்ப்பில்லாததால் நியாயமான விலை கிடைப்பதில்லை என்று விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கடந்த ஆண்டு கிலோ ஆயிரத்து 700 ரூபாய் வரை விற்பனையான இதன் விதை தற்போது ஆயிரம் ரூபாய்க்கும் கீழ் இடைத்தரகர்களால் விலை வைத்து வாங்கப்படுவதால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அரசு சார்பில் ஒட்டன் சத்திரம் பகுதியில் ஒரு கொள்முதல் நிலையம் அமைத்தால் நியாயமான விலை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மஞ்சள் விலை ஒரே நாளில் ரூ. 700 வரை உயர்வு**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 700 ரூபாய் உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மஞ்சள் விலை சென்றாண்டு குவிண்டாலுக்கு 13 ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டில் ஜனவரி மாத இறுதியில் இருந்து மஞ்சள் சீஸன் துவங்கியது. மஞ்சள் சீஸன் துவங்கிய நேரத்தில் மஞ்சள் ஒரு குவிண்டால் 9,900 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மஞ்சள் விலை 3,700 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்து. இவ்விலை மூன்று மாதங்களாக நீடித்தது. மார்ச் 17ம் தேதி மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 2,400 ரூபாய் திடீரென அதிகரித்து 13 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்கப்பட்டது. மார்ச் 18 ம் தேதி மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரை மேலும் அதிகரித்து ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 917 ரூபாய்க்கு விற்பனை செய்து வரலாற்று சாதனை படைத்தது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற வாரத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 13 ஆயிரத்து 917 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மஞ்சள் விலை திடீரென உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

விலை உயர்வு காரணமாக ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பிற பகுதியில் அறுவடை செய்யப்பட்ட மஞ்சளும் ஈரோடு மார்க்கெட்டுக்கு அதிகளவில் கொண்டு வரப்பட்டன. இதனால், மஞ்சள் விலை திடீரென குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்தது. சனி, ஞாயிறு விடுமுறைக்கு பின் நேற்று மீண்டும் மஞ்சள் மார்க்கெட் துவங்கியது. ஒழுங்கு விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் 13 ஆயிரத்து 600க்கு ஏலம் கோரப்பட்டது. 1,817 மூட்டைகள் வரத்தானதில் 1,780 மூட்டை விற்பனையானது. விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 629 ரூபாய், கிழங்கு மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 486 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெளி மார்க்கெட்டுக்கு 4,769 மூட்டைகள் வரத்தானதில், 673 மூட்டைகள் மட்டுமே விற்பனையானது. விரலி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 537 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 367 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சேலம் ரகம் விரலி ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 797 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 466 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**தேங்காய் மூலம் நீர்மட்டத்தை கணிக்கும் வாலிபர்**

சென்னிமலை: நிலத்தடி நீர் மட்டத்தை தேங்காய் மூலம் மிக துல்லியமாக கணித்து அசத்துகிறார் சென்னிமலையை சேர்ந்த வாலிபர்.சென்னிமலை அருகே செலம கவுண்டம்பாளையத்தை சேர்ந்தவர் ராஜா (28). நவீன கருவிகள் ஏதுமின்றி, தேங்காயை வைத்து நிலத்தடி நீர் மட்டத்தை கணித்து வருகிறார். தனது உள்ளங்கையில் முழு தேங்காயை வைத்து சிறிது தூரம் நடந்து செல்கிறார். எந்த இடத்தில் வரும் போது தேங்காய் தானாக நிமிர்ந்து நிற்கிறதோ, அந்த இடத்தில் நிலத்தடி நீர்மட்டம் சாதகமாக உள்ளது என கணிக்கிறார்.

சென்னிமலை யூனியன் சிறுகழஞ்சி கிராம பஞ்சாயத்து தலைவர் மோகனசுந்தரம் கூறியதாவது:எனது சொந்த உபயோகத்துக்காக 40 சென்ட் நிலத்தில் கடந்த ஐந்தாண்டாக எட்டு இடத்தில் ஆழ்குழாய் அமைத்தும், எதிலும், தண்ணீர் கிடைக்கவில்லை. இதற்காக, நான்கு லட்சம் ரூபாய் வரை செலவு செய்து நொந்து போனேன். அப்போது ராஜா அதே நிலத்தில் ஒரு இடத்தை காட்டினார். 60 அடியிலேயே தண்ணீர் கிடைத்தது. இதையடுத்து, பஞ்சாயத்து பகுதியில் அரசு மூலம் அமைக்கும் ஆழ்குழாய் கூட, ராஜா அனுமதியின்றி அமைப்பதில்லை. இவ்வாறு அவர் கூறினார். பனியம்பள்ளி கிராம பஞ்சாயத்து தலைவர் சிவக்குமார் கூறியதாவது: பனியம்பள்ளி கிராமத்தில், 'நமக்கு நாமே திட்டம்' மூலம் ஆழ்குழாய் அமைக்க, அரசு அதிகாரிகள் மிஷின் மூலம் நீர்மட்டம் பார்த்தனர். குறிப்பிட்ட இடத்தில் 520 அடியில் தண்ணீர் கிடைக்கும் என சான்று கொடுத்தனர். ஆனால், 580 அடி தோண்டியும் தண்ணீர் இல்லை. இனி முடியாது என போர்வெல் கான்ட்ராக்டர் கூறிவிட்டார். இதையடுத்து ராஜாவை அழைத்தனர்.

சம்பவ இடத்தை அவர் பார்த்து விட்டு, '850 அடிக்கு கீழ் தண்ணீர் நிச்சயம் கிடைக்கும்' என்றார்.அவர் சொன்னது போல, 860 அடியில் நீர் வரத்துவங்கியது. அங்கு தங்கு தடையின்றி நீர் வந்ததால், பனியம்பள்ளி மட்டுமின்றி அருகிலுள்ள கிழக்குதோட்டம் புதூர், முத்திராண்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுத்து வருகிறோம். ,அதனால் அரசு போர்வெல் கூட ராஜா அனுமதி இல்லாமல் போடுவது இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.நீரூற்று பார்க்க ராஜா 3,000 ரூபாய் கட்டணம் வசூல் செய்கிறார். தண்ணீர் இல்லை எனில் கட்டணத்தை திருப்பி கொடுத்து விடுகிறேன் எனக்கூறியே பணம் வாங்குகிறார். தண்ணீர் கஷ்டம் உள்ள கிராமங்களுக்கு நீர்மட்டம் பார்க்க கட்டணம் வாங்குவதில்லை.

**25 சத மானியத்தில் விவசாய உபகரணங்கள் : விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்**

ஊட்டி: 'பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரம், கைத்தெளிப்பான், பவர்டில்லர் முதலான கருவிகள், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 25 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி தலைமை வகித்தார். நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம், ஊட்டி காட்டேரி நீர்பிடிப்பு பகுதி விவசாயிகள் சங்கம், கேத்தி பாலடா கூக்கல் பொதுமக்கள், இந்தியன் லிபரல் குரூப் லவ்டேல் மற்றும் இதர விவசாயிகள், தோட்டக்கலை இணை இயக்குனர் (பொ), துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள், உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, விபரம் பெற்று, குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. "பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரம், கைத்தெளிப்பான், பவர்டில்லர் முதலான கருவிகள், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 25 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. பசுமைக் குடில்கள், மண்புழு உரம் தயாரித்தல், தேனீ வளர்த்தல், சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மூலம் செயல்படுத்தப்படுகிறது," என, ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் ராம்சுந்தர் தெரிவித்தார். "கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்

மற்றும் ஊட்டி வட்ட வழங்கல் அலுவலரின் அறிக்கையின் படி, கிராமத்தில் பகுதி நேர ரேஷன் கடை திறக்க ஆவன செய்யப்படும்," என, மாவட்ட வழங்கல் அலுவலர் தெரிவித்தார். 'உருளைக்கிழங்கு தரம் பிரிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது; இம்மாத இறுதிக்குள் புதிய இயந்திரங்கள் செயல்பட துவங்கும்' என, நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது.  இயற்கை சீற்றத்துக்கான நஷ்டஈடு மானியம், ஒரு எக்டேருக்கு 7,500 ரூபாய் என அரசால் நிர்ணயிக்கப்பட்டு, 2009 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பயிர் சேதாரத்துக்கு, விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது' என, தோட்டக்கலைத் றையினரால் தெரிவிக்கப்பட்டது. 'கீழ்கவ்வடி கிராமத்தில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொதுக் கழிப்பிடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என, ஊராட்சி ஒன்றிய கமிஷனர் தெரிவித்தார்.

**விவசாய மானியமாக ரூ.6.50 கோடி ஒதுக்கீடு : வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி தகவல்**

ராமநாதபுரம்: "மாவட்ட விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்குவதற்காக 6.50 கோடி ரூபாயை மத்திய,மாநில அரசுகள் ஒதுக்கி உள்ளதாக," வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
மேலும் வேளாண் துணை சார்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து அவரது சிறப்பு பேட்டி:
*ராமநாதபுரம் வறட்சி மாவட்ட இருந்து வரகாரணம் என்ன?
இது இயற்கை சார்ந்ததாகும். இதிலிருந்து விவசாயிகளின் சிரமங்களை தடுப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*எது போன்ற பணிகள் நடக்கிறது?
வறட்சியால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
*நிவாரணம் பெற வேண்டிய நிலைக்கு காரணம் என்ன?
வறட்சியை மழை தீர்மானிக்கிறது. பெரும்பாலான விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும் என்பதற்காக, உரங் களை அளவுக்கு அதிகமாக உபயோகிப்பதால் தான் இந்நிலை ஏற்படுகிறது.
*இதை தடுக்க வேறு வழியில்லையா?
காற்றோட்டமான நடவு முறை, தேவைக்கேற்ப உரங்கள், முறையான பராமரிப்பு இருந் தாலே நல்ல மகசூல் கிடைக்கும்.
*இவற்றை தவறுவதால் தான் பாதிப்பு ஏற்படுகிறதா?
பெரும்பாலும் இதனால் தான் ஏற்படுகிறது. மாவட்டத்தில் சில பகுதிகள் தான் உண்மையான வறட்சியில் பாதிக்கப்பட்டுள் ளன.
*பாதிக்கப்பட்ட பகுதிகள் எவை?
கடலாடி தாலுகாவில் 58 ஆயிரத்து 27 பேருக்கு சொந்தமான 17 ஆயிரத்து 75 எக்டேர் , கமுதி தாலுகாவில் 10 ஆயிரத்து 504 பேருக்கு சொந்தமான 3048 எக்டேர்.
*இவர்களுக்கு நிவாரண கிடைக்க ஏற்பாடுகள் நடக்கிறதா?
கலெக்டர், அமைச்சரின் பரிந்துறையின் பேரில் அரசுக்கு அனுப்பி உள்ளோம். நிவாரணம் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது.
*நீர் இருப்பு இருந்தும் சில இடங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதே?
நோய் தாக்குதல் மூலம் திருவாடானை, பரமக்குடி பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
*பாதிப்பின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளதா?
திருவாடானை பகுதியில் 69 ஆயிரத்து 867 நபர்களின் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 89 எக்டேர், பரமக்குடி பகுதியில் 1310 நபர்களின் 344 எக்டேர் பயிர்கள் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.
*இவர்களுக்கு எதேனும் தீர்வு உண்டா?

பயிர் காப்பீடு திட்டம் மூலம் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*இது வரை பயிர் காப்பீடு செய்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 73ஆயிரத்து 78 எக்டேர் பயிருக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 660 பேர் பதிவு செய்துள்ளனர்.

*இதற்கான பிரிமியம் பெறப்பட்டுள்ளதா?

பதிவு செய்துள்ள விவசாயிகள் 421 லட்சம் ரூபாய் பிரியம் செலுத்தி ள்ளனர்.

*மானியங்களுக்கு முக்கியதுவம் குறைந்து வருகிறதா?

மானியங்களுக்காக ஆண்டுக்கு ஆண்டு அதிக அளவில் தொகை ஒதுக்கப்படுகிறது. இந்த ஆண்டில் மட்டும் மத்திய, மாநில அரசு திட்டங்கள் மூலம் 6.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

*எந்த திட்டத்தில் அதிகமான மானியம் வழங்கப்படுகிறது?

தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூலம் 305 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

*எதற்காக இந்த மானியம் வழங்கப்படுகிறது?

விதை, உயிர் உரம், பயிர் பாதுகாப்பு மருந்து, விசை இயந்திரங்கள், கை தெளிப்பான் போன்றவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

*விதைகளுக்கு என செலவிடப்படும் மானியம்?

நெல், பயிறு வகைகள், கடலைகளின் விதை கொள்முதலுக்கு என இதில் 1.50 கோடி ரூபாய் அரசு செலவிடுகிறது.

*விதை கொள்முதல் எதன் அடிப்படையில் நடக்கிறது?

முன்னோடி விவசாயிகளை தேர்வு செய்து, அவர்களின் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

*வேளாண் துறையில் சமீபத்தில் சிறப்பு திட்டம் ஏதேனும் உண்டா?

சிறுதானியம், பயிறு உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக பாதி விலையில் விதை வழங்கும் 'விதை கிராம திட்டம்' சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு,குறு, ஆதிதிராவிடர் ,பெண் விவசாயிகள் இதில் பயனடையலாம்.

*விதை தட்டுப்பாட்டை தவிர்க்க திட்டம் வரவில்லையே?

இந்த ஆண்டு தான் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 'சேமிப்பு கலன்' அமைக்கும் இத்திட்டத்துக்கு 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் விதையை சேமித்து வைத்து 25 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

**முள்ளிகுளத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம்**

தென்காசி : முள்ளிகுளத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.

வாசுதேவநல்லூர் வட்டாரம் முள்ளிகுளத்தில் சிறு தானியங்கள் விதை கிராம திட்ட முதற்கட்ட பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்து பேசும் போது, சிறுதானிய விதை உற்பத்தியின் அவசியம் பற்றியும், விவசாயிகளே விதை உற்பத்தியை தங்கள் தேவைக்கு ஏற்ப செய்து கொள்வது பற்றியும் விளக்கம் அளித்தார்.

மத்திய அரசு திட்ட வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம் பேசும் போது, சிறுதானிய உற்பத்தி அதிகளவில் தேவைப்படுவது குறித்தும், தொழில் நுட்ப உத்திகளை கடைபிடித்து உற்பத்தியை பெருக்க விவசாயிகள் முன்வரவேண்டும் என்பது குறித்தும் பேசினார். மாநில அரசு திட்ட வேளாண்மை துணை இயக்குநர் துரைப்பாண்டியன் பேசும் போது, சிறு தானிய பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் போன்ற பயிர் சாகுபடியில் விதை உற்பத்தி பற்றி விளக்கினார்.

புளியங்குடி விதை சான்று அலுவலர் வீரபுத்திரன் சிறுதானிய பயிர்களின் விதை ரகங்கள், ஒவ்வொரு ரகங்களுக்கும் உள்ள குணாம்சங்கள், விதை சான்று நடைமுறைகள் உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் பற்றி பேசினார்.

உழவர் மன்ற அமைப்பாளர் கந்தசாமி முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அண்ணாதுரை, செல்லையா, சுபாஷ் சந்திரபோஸ், ஆறுமுகம் செய்திருந்தனர்.

**விதை கிராமதிட்ட பயிற்சி**

கே.வி.குப்பம் : கவசம்பட்டு கிராமத்தில் கே.வி.குப்பம் உதவி வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது.நிகழ்ச்சிக்கு, பஞ்., தலைவர் மகலாட்சுமி தலைமை வகித்தார். கே.வி.குப்பம் வேளாண்மை உதவி இயக்குனர் அண்ணாதுரை முன்னிலை வகித்தார். விவசாயிகளுக்கு கவசம்பட்டு உதவி அலுவலர் நாராயணன் பயிற்சி அளித்தார். விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. இதில் உழவர் மன்றத்தலைவர் பார்த்திபன் உட்பட 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விதை கிராம திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

தியாகதுருகம்: தியாகதுருகம் அடுத்த கொட்டையூரில் விதை கிராம திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தியாகதுருகம் வட்டார வேளாண்துறை சார்பில் நடந்த பயிற்சிக்கு விழுப்புரம் வேளாண் துணை இயக்குனர் கண்ணன் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குனர் கோவிந்தராஜ், துணை அலுவலர் பழனிவேல் முன்னிலை வகித்தனர். விதை கிராம திட்டத்தின் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்தல், விதை நேர்த்தி, நெல் நாற்றங்கால் அமைக்கும் முறை, செம்மை நெல் நடவு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. உதவி வேளாண் அலுவலர்கள் சிவக்குமார், தேவராஜ், தண்டபாணி, பழனிசாமி, தங்கதுரை பயிற்சியளித்தனர். சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மா மரங்களில் பிஞ்சுகள் உதிர்வதால் நஷ்டமடைந்து வரும் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி., பகுதியில் மாமரங்களில் விளையும் முன்பே, பிஞ்சுகள் உதிர்வதால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
செண்பக தோப்பு, வத்திராயிருப்பு, ராஜபாளையம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பஞ்சவர்ணம், சப்பட்டை உட்பட பல ரகங்களில் மா பயிரிடப்பட்டு வருகிறது.  வழக்கமாக டிசம்பர், ஜனவரி மாத முதல் வாரத்திற்கும் மாமரங்களில் பூ பூக்கும். ஆனால் கடந்தாண்டு சரிவர மழை இல்லாததால் பூ பூப்பதில் தாமதம் ஏற்பட்டது. பிப்ரவரியில் தான் பூ பூத்தது.  இவற்றில்  பெரும்பான்மை காய்ந்து போனது. ஒரு பூங்கொத்தில் ஒரு காய் மட்டுமே காய்க்கும் நிலை ஏற்பட்டது. அதுவும் வளரும் முன்பே வெப்பம் தாங்கமல் வெதும்பி கீழே விழுந்து விடுகிறது. பொதுவாக மாங்காய்கள் விளைந்த பின் தான் புதிய மா இலைகள் தோன்றும். இந்தாண்டு வழக்கத்திற்கு மாறாக காய்கள் விளையும் முன்பே புதிய இலைகள் தோன்றியுள்ளன.  இதனால் காய்கள் விளையுமுன்பே கீழே விழுந்து விடுகிறது. விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
இது குறித்து மம்சாபுரம் விவசாயி கந்தையா கூறியதாவது: கடந்தாண்டு மழை பெய்யாததால் மா மரங்கள் பூக்காமல் இருந்ததால் மருந்தடித்தேன். பின் பூ பூக்க துவங்கிய சில நாட்களில் பாதிக்கும் மேற்பட்டவைகள் கருகிவிட்டன. மீதமிருந்த பூக்களில், காய்கள் விளையும் முன்பே புதிய இலைகள் தோன்றியதால் காய்கள் விளையாமல் உதிர துவங் கியுள்ளது. விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது, என்றார்.

**முருங்கை வரத்து அதிகரிப்பு**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வாரச்சந்தைக்கு முருங்கை வரத்து அதிகரித்திருந்ததால், விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை வெள்ளகோவிலில் வாரச்சந்தை நடக்கிறது. விவசாயிகளிடம் இருந்து வாங்கும் முருங்கைக்காய்களை தரம் பிரித்து வாங்கும் வியாபாரிகள், மூட்டையாக கட்டி, கோவை, சென்னை உட்பட பல இடங்களுக்கு அனுப்பு கின்றனர். வெள்ளகோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த வாரச்சந்தையில், 25 முருங்கைக்காய் கொண்ட ஒரு கட்டு 12.50ல் இருந்து 13 ரூபாய் வரை விற்றது; ஒரு கிலோ நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்டது. 600 காய் கொண்ட மர முருங்கை 300; 25 காய் கொண்ட செடி முருங்கை 15 ரூபாய் என விற்கப்பட்டது; ஒரு கிலோ ஐந்து ரூபாய்; ஒரு மூட்டை 400 ரூபாய்க்கு விற்றது. முருங்கை வரத்து அதிகரித்திருந்த போதிலும், ஓரளவு விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**தொடரும் கோரிக்கை:** வெள்ளகோவில், புதுப்பை, கூடலூர் பகுதிகளில் சீசன் நேரங்களில் அதிகளவு முருங்கை பயிரிடுகின்றனர். இதனால், விற்பனை யாகாமலும், போதிய விலை கிடைக்காமலும் விவசாயிகள் தவிக்கின்றனர். மீதமாகும் காய்களை கொள்முதல் செய்து, பயனுள்ள பொருளாக மாற்றும், முருங்கை பவுடர் நிறுவனம் அமைத்து தர வேண்டும் என, விவசாயிகள் நீண்டநாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**அமராவதி சர்க்கரை ஆலையில் இளஞ்சூடு ஏற்றும் விழா**

உடுமலை: அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை ஏப்., 3 ல் துவங்குகிறது. முதல் கட்டமாக பாய்லர் இளஞ்சூடு ஏற்றும் விழா நேற்று நடந்தது. உடுமலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கோவை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்ட கரும்பு விவசாயிகள் அங்கத்தினர்களாக உள்ளனர். ஆலை அரவைக்கு, விவசாயிகளிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது.2009-11 சிறப்பு அரவைக்கு, 4 ஆயிரத்து 80 ஏக்கர் கரும்பு ஒப்பந்தமிடப்பட்டுள்ளது. நேற்று முதல் கட்டமாக ஆலையிலுள்ள பாய்லர்கள் இளஞ்சூடு ஏற்றும் விழா நடந்தது. உடுமலை வருவாய் கோட்டாட்சியர் சோமசேகரன், கரும்பு பயிரிடுவோர் சங்க தலைவர் வேலுசாமி, நிர்வாகிகள் துரைசாமி, தங்கவேல், ஆலை அலுவலர்கள் குப்பன், அருளானந்தம், ஜெயபால், நவநீதம் உட்பட விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகள் மத்தியில் தனி அலுவலர் ராமகிருஷ்ணன் பேசியதாவது : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கொள்முதல் செய்யும் கரும்புக்கு, போக்குவரத்து கூலி உட்பட கரும்பு டன் ஒன்றுக்கு 1,661 வழங்கப்பட உள்ளது. இந்த ண்டு கரும்பு பிழிதிறன் 10 சதவீதம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அரசு கரும்புக்கு கூடுதல் விலை அறிவித்துள்ள நிலையில், வெளி மார்க்கெட்டில் வெல்லத்திற்கும் விலை குறைந்துள்ளது. கரும்பு விவசாயிகள் அமராவதி சர்க்கரை ஆலைக்கு கரும்பு தர முன் வர வேண்டும். ஒப்பந்தமிட்டுள்ள கரும்பு அடிப்படையில் இந்த ஆண்டு 1.40 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆலை முழு அரவை திறன் 2.15 லட்சம் டன்களாகும். எனவே, ஒப்பந்தமிட்ட மற்றும் ஒப்பந்தமிடாத கரும்பு விவசாயிகள் ஆலை முழு அரவை திறனை எட்டுவதற்கு கரும்பு வழங்க முன் வர வேண்டும். ஆலைக்கு கரும்பு ஒப்பந்தமிடாத விவசாயிகள் உடனடியாக ஆலை கரும்பு கோட்ட அலுவலகத்தை தொடர்பு கொண்டு, அரவைக்கு கரும்பு தரலாம். மேலும், 2010-11ம் ஆண்டில், கரும்பு டன் ஒன்றுக்கு 2 ஆயிரம் வரை விலை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, உடனடியாக அடுத்த சிறப்பு பருவத்திற்கு கரும்பு பதிவு செய்து, ஆலை வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும், என்றார்.

**தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி**

திருப்பூர்: தோட்டக்கலைத்துறை நீர்வள நிலவள திட்டத்தில், விவசாயிகளுக்கு நேற்று பயிற்சி அளிக்கப்பட்டது. திருப்பூர், பொங்கலூர், பல்லடம் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கான பயிற்சி வேளாண்

இணை இயக்குனர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. மூன்று வட்டாரங்களிலும் தலா 20 விவசாயிகள் என 60 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக் கலைத்துறை சார்பில் வெங்காயம், தக்காளி, வெண்டை, திசு வாழை, பீட்ரூட் உள்ளிட்டவைக்கு இடுபொருள் அளிக்கப்பட்டது. ஒரு விவசாயிக்கு அரை ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் மதிப்புள்ள இடுபொருள் வழங்கப்பட்டது. இடுபொருள் பெற்ற விவசாயிகளுக்கு, உயர் தொழில்நுட்ப பசுமை குடில், சொட்டு நீர் பாசனம், திசு வளர்ப்பு, வாழை சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை, 'கோவை ஜெயின் இரிகேஷன்' நிறுவன பிரதிநிதிகள் விளக்கினர்.

**திருப்பூர், பல்லடம் பகுதியில் நடமாடும் நெல் கொள்முதல் மையம் திறப்பு**

திருப்பூர்: திருப்பூர் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, கூடுதலாக இரண்டு நடமாடும் நெல் கொள்முதல் மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. கலெக்டர் சமயமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில், காரிப் (சம்பா) பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல், பிப்., மாதத்தில் அறுவடைக்கு வந்தது. டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் நெல் அறுவடை தீவிரமடைந்ததை தொடர்ந்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 1,200க்கும் மேற்பட்ட கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டன. காரிப் பருவத்தில் அறுவடை தாமதமாக துவங் கினாலும், அனைத்து கொள்முதல் நிலையங்களுக்கும் நெல் வரத்து அதிகமாகவே இருந்தது.

திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம் பகுதியில் கொள்முதல் மையம் அமைக்காததால், தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால், அரசே நெல்லுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், திருப்பூர் மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகம் உள்ள இடங்களில் கொள்முதல் நிலையங்களை துவக்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து, மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத் தின் கீழ், காங்கயம் பகுதியில் முத்தூர், நத்தகாடையூர் ஆகிய இடங்களிலும், தாராபுரத்தில் புதுப்பை, தளவாய் பாளையம் ஆகிய இடங்களிலும் நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டன. இம் மையங்களில், தரத்திற்கு ஏற்ப சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு 1,100 ரூபாய்; சாதா ரக நெல் ஒரு குவிண்டாலுக்கு 1,050 ரூபாய் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்படுகிறது.

மேலும், விவசாயிகளின் நலன் கருதி, 40 கிலோ மூட்டை 300க்கு மேல் இருப்பு வைத்துள்ள விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய பல்லடத்தில் வடுகபாளையம் வட்டார கிடங்கு, திருப்பூரில் காங்கயம் ரோடு வட்டார கிடங்கு ஆகியவற்றில் நடமாடும் நெல் கொள்முதல் மையங்கள் துவக்கப் பட்டுள்ளன. 300 மூட்டைக்கு மேல் நெல் இருப்பு வைத்துள்ள விவசாயிகள், கொள்முதல் நிலைய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தால், நேரடியாக விவசாயிகளின் இடத்துக்கே வந்து நெல் கொள்முதல் செய்வர். தேவைப்படும் இடங்களில் கூடுதலாக நெல் கொள்முதல் மையங்கள் திறக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு சலுகை: கருணாநிதி பட்டியல்**

மார்ச் 23,2010,00:00  IST

சென்னை: தமிழக அரசின் பட்ஜெட்டில், விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ள சலுகைகள் மற்றும் திட்டங்களை, முதல்வர் கருணாநிதி பட்டியலிட்டுள்ளார்.அவரது அறிக்கை:பட்ஜெட் பற்றிய குறைகளை மட்டும் சொல்லாமல், மார்க்சிஸ்ட் கட்சியினர் நிறைகளையும் பாராட்டியிருக்கின்றனர். இதற்காக நன்றி.விவசாயிகளை அரசு கைவிட்டுவிட்டதாக அவர்கள் கூறியிருக்கின்றனர். கரும்பு நடப்பு அரவைப் பருவத்துக்கு விலை, டன்னுக்கு 100 ரூபாய் அதிகமாக வழங்கப்படும் என அறிவித்திருப்பதும், 2010-11 பருவத்துக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்திருப்பதும் தான் விவசாயிகளை கைவிட்டதற்கான அர்த்தமா?வரும் நிதியாண்டில், விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் 2,500 கோடி ரூபாய் கடன் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆவின் ஒரு லிட்டர் பால் சப்ளை : இன்று முதல் நிறுத்தம்**

*மார்ச்* 23,2010,00:00  IST




மதுரை : பால் வரத்து குறைவதால், மதுரையில் ஆவின் ஒரு லிட்டர் பிரிமியம் பால் சப்ளை இன்று முதல் நிறுத்தப்படுகிறது.

மதுரை ஆவினில் பிரிமியம் ரக பால் (4.5 சதவீதம் கொழுப்புச் சத்து, 9 சதவீதம் இதர சத்து) அதிகம் விற்கிறது. சமீபகாலமாக மதுரை ஆவினில் பால் கொள்முதல் குறைந்தது. சென்ற ஆண்டு இதே காலகட்டத்தில் ஒரு நாளைக்கு 1.90 லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் அளவு, தற்போது ஒரு நாளைக்கு 1.75 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. கொள்முதல் குறைந்தாலும் இருக்கிற பாலை வைத்து, மதுரை, தேனி மாவட்டங்களில் நிலைமையை சமாளிக்கலாம். ஆனால் இதற்குப் பதில், 'கிராக்கி'யை பயன்படுத்தி, சில ஆவின் அதிகாரிகள், தங்களுக்கு தொடர்பே இல்லாத சிவகங்கை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கமிஷனையும் 'டெபாசிட்'டையும் பெற்றுக்கொண்டு, ஏஜன்டுகளை நியமிக்கின்றனர்.

மினிலாரிகளில் அம்மாவட்டங்களுக்கு பால் அனுப்பப்படுகிறது. இதனால், மதுரை, தேனி மாவட்டங்களில் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்போது, பிரிமியம் பாலின் ஒரு லிட்டர் பாக்கெட் சப்ளையை இன்று முதல் நிறுத்த ஆவின் முடிவு செய்துள்ளது. இதனால் நேற்று முதல் மதுரை, தேனி ஏஜன்டுகளிடம் பணம் பெறப்படவில்லை. 'ஒரு

லிட்டர் பால் இனிமேல் வராது' என்றும் ஏஜன்டுகளிடம் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சி அடைந்த ஏஜன்டுகள், ஆவின் அதிகாரிகளுடன் தகராறில் ஈடுபட்டனர். 'தூய பசும்பால்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட ரக பாலுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காப்பீட்டுத் தொகை மானியமாக 40 கோடி ரூபாய், நெல் கொள்முதல் செய்ய 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும், வரும் நிதியாண்டில், மேலும் 10 ஆயிரம் விவசாயிகள் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.கடந்த ஆண்டு பட்ஜெட்டில் உணவு மானியமாக அறிவிக்கப்பட்டது 2,800 கோடி ரூபாய் தான். ஆனால், செலவழிக்கப்பட்டது 4,000 கோடி ரூபாய். அதுபோலவே, இந்த ஆண்டு 3,750 கோடி ரூபாய் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அந்தத் தொகை போதவில்லை என்றால், மேலும் ஒதுக்கப்படும்.இலவச 'டிவி' வாங்க, சட்டசபையில் உள்ள அனைத்துக் கட்சிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. அந்தக் குழுவில் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டசபைத் தலைவரான சிவபுண்ணியம் இடம்பெற்றிருக்கிறார்.அவரை தா.பாண்டியன் தொடர்பு கொண்டு, 'மத்திய அரசு கொடுக்கிற பணத்தில் தான், 'டிவி'யை மாநில அரசு வழங்குகிறதா' எனக் கேட்டுத் தெளிவு பெறுவது நல்லது.

மேலும் அவர், 'பட்ஜெட்டில் நிதியமைச்சர் அன்பழகன் 3,000 கோடி ரூபாய் துண்டு என்கிறார். நிதித்துறைச் செயலர் ஞானதேசிகன் 16 ஆயிரம் கோடி ரூபாய் துண்டு என, உண்மையைச் சொல்லுகிறார்' எனப் பேசியிருக்கிறார். 3,000 கோடி என்பது வருவாய்ப் பற்றாக்குறை. 16 ஆயிரம் கோடி என்பது நிதிப் பற்றாக்குறை. இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. இரண்டையுமே பட்ஜெட்டில் அன்பழகன் படித்துக் காட்டியிருக்கிறார்.இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார்.

*பிப்ரவரி மாதத்தில் முந்திரி ஏற்றுமதி உயர்வு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*சென்ற பிப்ரவரி மாதத்தில் நம் நாட்டிலிருந்து 8,182 டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற*

*ஆண்டு பிப்ரவரியில் 8,015 டன்னாக இருந்தது. ஆக, முந்திரி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 2.08 சதவீதம் அதிகரித்துள்ளது. இது, மதிப்பின் அடிப்படையில் ரூ.214 கோடியிலிருந்து ரூ.222 கோடியாக உயர்ந்துள்ளது.*

தேக்கநிலை

*சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வரை முந்திரி ஏற்றுமதியில் மந்தநிலை காணப்பட்டது. பல நாடுகள் தேக்கநிலையிலிருந்து விடுபட்டு வருகின்றன. இதனால் பல்வேறு நாடுகளில் முந்திரி பயன்பாடு மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தேவைப்பாடு உயர்ந்துள்ளதால் நடப்பு ஆண்டில் முந்திரி ஏற்றுமதி மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.*

*நடப்பு ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஒட்டுமொத்த அளவில், ரூ.463 கோடிக்கு 16,876 டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ஜனவரி–பிப்ரவரி மாத காலத்தை விட இது 331 டன் அதிகமாகும். அதே சமயம், மதிப்பின் அடிப்படையில் ஏற்றுமதி ரூ.24 கோடிதான் உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஒரு கிலோ முந்திரிப் பருப்பு ரூ.271–க்கு ஏற்றுமதி ஆகியுள்ளது. இது, சென்ற ஆண்டு பிப்ரவரியில் ரூ.267–ஆக இருந்தது.*

*11 மாதங்களில்...*

*அதே சமயம், நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாதங்களில் முந்திரி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 8 சதவீதம் குறைந்து 92,645 டன்னாக சரிவடைந்துள்ளது. இது, மதிப்பின் அடிப்படையில் 9 சதவீதம் சரிந்து ரூ.2,489 கோடியாக குறைந்துள்ளது. சென்ற 2008–09–ஆம் முழு நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி, 1,09,523 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு ரூ.2,988 கோடியாகும்.*

*எனினும், ஏப்ரல்–பிப்ரவரி மாத காலத்தில் முந்திரிக் கொட்டை இறக்குமதி 23 சதவீதம் அதிகரித்து 7,26,095 டன்னாக உயர்ந்துள்ளது. பிப்ரவரி மாத்திலும் இறக்குமதி குறைந்து 38,628 டன் என்ற அளவில் இருந்தது.*